Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 30-3-1985 சனிக்கிழமை (பங்குனி 17- றஜப்-7) முழக்கம் 54

## மட்டுநகரில் கொலை, கொள்ளை கைது; எங்கும் பதற்றம்!

(மட்டுநகர்)

மட்டுநகரின் பல பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற பல சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது களவாஞ்சிக்குடியில் இளைஞர் ஒருவரும், மற்றொரு வயோதிபரும் பலியானதாக தெரிவிக்கப்பட்டது. துறைநீலாவணை, பெரிய கல்லாற்றுப் பகுதிகளில் பலதத சோதனை நடைபெற்றது. காத்தான்குடி எரிபொருள் நிலையமொன்றில் பதினோராயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. காரைதீவில் இளம் பெண்ணொருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இச்சம்பவங்களைத் தொடர்ந்து எங்கும் பெரும் பதற்றம் நிலவியது

# இராணுவ நடவடிக்கை தீர்வு தராது; பிரச்சினை தீர பேச்சுவார்த்தை தேவை என்கிறார் லலித்

(கொழும்பு)

"இராணுவ நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது பேச்சுவார்த்தைகளே பிரச்சினைத் தீர்வுக்கு சாத்தியமாகும்" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்

"வடபகுதியில் பாதுகாப்புப் படையினர் கடமையிலீடுபடுத்தப்படாதிருந்தால் தீவிரவாதிகள் தமது போராட்டத்தில் வெற்றி பெற்றிருப்பார்கள்" என்று அமைச்சர் சொன்னார்.

"அரசியல் சலுகைகளை வழங்கினால் பயங்கரவாதம் தானாகவே மறைந்து விடும் என்ற ஒரு கருத்து தற்போது நிலவி வருகிறது அதே வேளையில் வன்செயல்கள் தானாகவே மறைந்து விட்டால் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்துவது இலகுவாக இருக்கும் என்ற ஒரு கருத்தும் தற்போது அதிகரித்து வருகிறது. என்னைப் பொறுத்த மட்டில் இந்த இரண்டு கருத்துக்களும் நல்லதல்ல" என்றும் அமைச்சர் கூறினார்.

அரசியல் சலுகைகள் கொடு

—4-ஆம் பக்கம் பார்க்க

★ யாழ்ப்பாணத்திலிருந்து 5000 பேர் ஒப்பமிட்டு மகஜர்:

# இலங்கை வருவதை பின்போட தட்சரிடம் இறுதிக் கோரிக்கை!

## "மனித உரிமை பேணும் தலைவியான நீங்கள் இனக்கொலை நாட்டுக்கு வரவேண்டுமா?"

"மனித உரிமைகளை மதிக்கும் நாகரிகமான ஒரு நாட்டின் தலைவியான தாங்கள், மனித உரிமைகள் மீறப்பட்டு, இனப் படுகொலை நடைபெறும் இலங்கைக்கு இச்சந்தர்ப்பத்தில் வருவது விரும்பத்தக்கதல்ல. இந்நாட்டின் பிரஜைகளான தமிழர்கள் தினம் தினம் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்காகவாவது தங்களின் ஏப்ரல் மாத இலங்கை விஜயத்தை பிற்போடுவது நல்லது. இதன் மூலம் ஆயிரம் உயிர்களையாவது நீங்கள் காப்பாற்றியவராவீர்கள்"

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் பேரால் கைச்சாத்திடப்பட்டு, பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரொன்றில் மேற்கண்டவாறு உருக்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

"பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு சிங்களவரும் தமிழருமே ஒன்றுபட்டு உழைத்தனர். ஆனால் கிடைத்த சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை தமிழருக்கு வழங்கப்படவில்லை சிங்களம்

—4 ஆம் பக்கம் பார்க்க

## ஒருவர் கைது

(மல்லாகம்)

நேற்று முன்தினம் மாலை மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலடியில் மோட்டார்

—4 ஆம் பக்கம் பார்க்க

கைக்கு எட்டியது...!

## டீசலும் பெற்றோலும் வந்த ரயிலும் திரும்பிச் சென்றன

விசேஷ புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்துக்குவரவழைக்கப்பட்ட பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை இங்கு இறக்கப்படாமலே திருப்பிக் கொண்டு செல்லப்பட்டன.

தலா ஐயாயிரம் கலன் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் நேற்று ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்ததாயினும், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சம்பவமொன்றினால் அவை இறக்க அனுமதிக்கப்படவில்லையாம்.

தற்போது கிளிநொச்சியில் இவை இறக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து பவுஸர் மூலம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## டீசல் இல்லாததால் குடாநாட்டு பஸ் சேவைகள் ரத்து

டீசல் இல்லாததால் வடபிரதேச போக்குவரத்துச் சபையின் சகல குடாநாட்டு பஸ் சேவைகளும் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஓரிரு பஸ்கள் மட்டும்திரும்பிச் செல்லும்போது நெடுந்தூரப் பிரயாணிகளை ஏற்றிச் சென்றன.

மட்டுநகர் பஸ் யாழ்ப்பாண சேவையில் ஈடுபடவில்லை. திருமலை பஸ் நேற்றுமாலை யாழ்ப்பாணம் வந்தது.

நேற்று பாடசாலைகளின் பரீட்சை ஆரம்பமானதால் சீஸன் டிக்கட் பெற்ற மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாது தத்தளித்தனர்.

தனியார் வான்கள் பல பாதைகளிலும் வழக்கமான சேவையில் ஈடுபட்டன.

டீசல் வந்து சேராததால் இன்றும் பஸ் சேவைகள் நடைபெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

### செயலகத்தில் பெறுபவர்களின்

## ஏப்ரல் மாத ஓய்வூதியம் திங்கள் முதல் கிடைக்கும்

புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, யாழ் அரசாங்க செயலக இலங்கை வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஏப்ரல் மாத பென்ஷன் பணக் காசோலையை திங்கட்கிழமை முதல் வழங்க நட

—4 ஆம் பக்கம் பார்க்க

## தந்தை செல்வா நினைவு தினம்

தந்தை செல்வா நினைவுதின வழிபாடு நாளை ஞாயிறு காலை

—4 ஆம் பக்கம் பார்க்க

## தாதிமாருக்கு எச்சரிக்கை

நாட்டிலுள்ள தாதிமார்கள் வேலை நிறுத்தம் செய்தால்

—4 ஆம் பக்கம் பார்க்க

### ராஜ்ய சபாவில் அமைச்சர் ஆலம்கான் தகவல்:

# தமிழர் விவகாரம்: இந்திய அரசின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை!

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு திருப்தியளிக்கக் கூடிய தீர்வு ஒன்றையே இந்தியா விரும்புகின்றது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கான் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயம் பற்றி குறிப்பிட்டு பேசிய அவர் இலங்கையில் சகஜ நிலைமை திரும்பாவிட்டால் இப்பிரச்சினைக்கு திருப்திகரமான தீர்வு ஏற்படாது எனவும், இந்தியா வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் கௌரவமாகவும், மதிப்புடனும் நாடு திரும்ப வேண்டும் என்றும் அவர் சொன்னார். இந்த அகதிகளின் உயிர் உடைமைக்கு பாதுகாப்பு அளிக்க இலங்கை அரசு உறுதியளிக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் இந்தப் பிரச்சினைக்கு எவ்வ

—4ஆம் பக்கம் பார்க்க

## கூட்டறிக்கை விடவில்லை

திரு ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயத்தின் பின்னர்

—4ஆம் பக்கம் பார்க்க

## தபால் நிலைய பென்ஷன் 2ம் திகதி முதல் விநியோகம்

ஏற்கனவே இருதடவை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டு பின்னர் வங்கியில் பணம் இல்லாததால் ஒத்திவைக்கப்பட்ட தபால் நிலையங்களில் பென்ஷன் பெறுபவர்களின் ஓய்வூதியத்தை எதிர்வரும் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குருநகர் மக்கள் வங்கிக் கட்டடத்தில் வைத்து பின் வரும் ஒழுங்குக்கு அமைய பென்

—4 ஆம் பக்கம் பார்க்க

## நல்லை ஆதீனத்தில்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று காலை 7 மணி

—4 ஆம் பக்கம் பார்க்க

# யாழ் நகரில் வீடு அமைக்க, மலசல கூடம் கட்டுவதற்கென 30 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(நல்லூர்)

பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக்குள் வாழும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களது வீடுகளைத் திருத்தியமைக்கவும், அவர்கள் தமக்கென மலசல கூடங்களையும், கிணறுகளை அமைத்துக்கொள்ளவும், வீட்டுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொள்ளவும் மாநகராட்சி மன்றத்தின் மூலம் கடன் வழங்க ரூபா 30 லட்சம் எமக்கு இவ்வருடத்திற்குக் கிடைத்திருக்கிறது. இதனைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

இவ்வாறு யாழ். மாநகராட்சி மன்ற கமிட்டி அறையில் நடைபெற்ற வீடமைப்புத் திட்ட அபிவிருத்திக் குழுவின் முதலாவது கூட்டத்தில் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சீ வி கே. சிவஞானம் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களும் — செயலாளர்களும் - கிராம சேவையாளர்கள் - விசேட சேவை அலுவலர்கள் - சனசமூக நிலைய நிர்வாகிகள் ஆசிரியர்கள் பெருமளவில் கலந்து கொண்ட கூட்டத்தில் ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில் இதுவரை உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடைபெற்ற இவ்வேலை இப்பொழுது மாநகராட்சி மன்ற எல்லைக்குள் குடியிருப்போருக்கு கடன் வழங்குவதும், வேலைகளை ஒழுங்காகச் செய்விப்பதற்கான பொறுப்பும் மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மாநகராட்சிமன்றத்தின்வட்டாரங்கள் தோறும் அமைக்கப்பட்டிருக்கும் யூனிசெப் நிர்வாக வேலைக்குழுக்கள் இவ்வேலைகளைப் பார்வையிட்டு சிபார்சு செய்யும் இக்குழுக்களுக்கு உதவியாக கிராம சேவையாளர்களும் - விசேட சேவை அலுவலர்களும் பணிபுரியும் படி கேட்கப்படுகின்றனர்

1200 ரூபாவுக்குக் கீழ் குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொருவரும் தமது தேவைகளுக்காக கடனுக்கு விண்ணப்பிக்க முடியும் இந்தக் கடன் மூலம் மாநகரசபை எல்லைக்குள் வாழும் வறிய மக்கள் தமது வாழ்க்கை முறையில் மாற்றங்கள் செய்ய முன் வர வேண்டும் எமக்குக் கிடைத்திருக்கும் 30 லட்சம் ரூபாவையும் நாம் இந்த வருடம் முடிவதற்குள் பாவிக்க வேண்டும்.

வீடமைப்புத்திட்ட ஆலோசகா முகாமையாளர் திரு ரி பி. முருகையா பேசுகையில் அரசு வழங்கியிருக்கும் இந்த நிதியின் மூலம் வறிய மக்கள் நல்ல பயனைப்பெற வேண்டும். ஏழை மக்களைக் குடியேற்றுவதற்காகவும், அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காகவும் அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் சிலர் அத்துமீறிக் குடியேறி வருகிறார்கள். இந்த நிலைமையினால நிர்வாகத்துக்குப்பெரிய தலையிடி ஏற்படுகிறது. சொந்த மாகக் காணிகள், வீடுகள் உள்ளவர்களும் அரசாங்கம் சுவீகரித்த காணிகளில் அத்துமீறிக் குடியேறுவதும், காணிகளுக்கு எல்லைபோட்டு தமதுடைமையாக்குவதும் இன்று நிர்வாகத்துக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

குறைந்த வட்டியில் கிடைக்கும் இந்தக் கடனுதவியை மாநகரசபைஎல்லைக்குள் வசிக்கும் ஏழை மக்கள் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தையும் - தமது வீடுகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில்கலந்துகொண்ட பிரதிநிதிகள் கேட்ட கேள்விகளுக்கு ஆணையாளரும் -ஏனைய அதிகாரிகளும் பதிலளித்தனர். கூட்டத்தில நல்லூர், யாழ்ப்பாணம், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர்.

# பாதிப்படைந்து உயிரிழந்த குடும்பத்துக்கு பண உதவி

(குருநகர்)

குருநகர் பகுதியில் 1983-ம் ஆண்டிற்குப் பிற்பாடு நாட்டில் ஏற்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டு உயிர்ச்சேதம் அடைந்த குடும்பங்களுக்கு உடனடியாக ரூபா 1000/- தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் இருந்து பெறறுக் கொள்ளும் வாய்ப்பையும் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய புதிய அதிபர் செய்துள்ளார்,

இதுவரை அவ்வாறு நிதியை நன்கு குருநகா பகுதி பொது மக்கள் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மேலும் அவர்களைப்பற்றிய விபரங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து உதவிகளை பெற்றுக் கொடுத்தும் வருவதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு குருநகர் பாக் ரோட்டைச் சேர்ந்த யேசுதாஸன் அன்ரன் என்பவருக்கு அமெரிக்காவில் இருந்து கோழிப்பண்ணை நிறுவுவதற்கு பதின்மூவாயிரம் ரூபா கிடைப்பதற்கும் மேற்படிக் கழகம் ஒழுங்கு செய்ததுடன் குருநகரைச் சேர்ந்த இல்டா சுந்தரராஜன் என்பவருக்கு பதினைந்தாயிரம் ரூபா கிடைக்க சிபார்சும் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# நீர்வேலிவடக்கு மகளிர்குழு காணி வசதி கேட்கின்றது

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு மகளிர் குழுவுக்கு நிரந்தரமாக ஒரு கட்டட வசதி செய்து தர வேண்டுமென யாழ். கல்வி உத்தியோகத்தரைக் கேட்பதென இம்மகளிர் குழுவின் நிர்வாக சபையில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இக்குழுவின் நிர்வாகக் கூட்டத்தில், ஆங்கு மேலும் பல கலைகள் தொடர்ந்தும் கற்பிக்கப்பட வேண்டுமெனவும் பல்கலைப்பயிற்சி வகுப்பில் செய்யப்படும் பொருட்களை கூட்டுறவுக் கடைகள் மூலம் விறபதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

இதற்கு முன்னர் நடைபெற்ற குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்;

தலைவர்; செல்வி ரீ. அருளம்பலம், உபதலைவர்; செல்வி என். கிருஷ்ணபிள்ளை, செயலாளர்; செல்வி ஜே இராஜசிங்கம். நிர்வாக சபை உறுப்பினர்கள்; செல்வி ச வல்லிபுரம், செல்வி கோ. இராஜசுங்கம்.

## இன்று

(இருபாலை)

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு சிவநாயமூர்த்தி கலந்து கொள்கிறார்.

# வேறுபாடு களைந்து ஐக்கியம் மலர பேரவை உருவாகியது

(பண்டத்தரிப்பு)

ஐக்கிய மாணவர் பேரவையின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான கிளைக்குழு அங்குராபபணக் கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு ஐக்கிய மாணவர் பேரவையின் பொதுச் செயலாளர் செல்வன் கே. கமூரன் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இந்த அமைபபானது மாணவர்களின் நலன் கருதி மாணவர்களினாலேயே ஏற்படுத்தப்பட்ட ஒரு தனித்துவமான அமைப்பாகும். இது எந்த அரசியல ஸ்தாபனத்தையோ அன்றி அரசியல் கட்சியையோ சார்ந்ததாக இருக்காது, தனது தனித்துவததை இழக்காமலமாணவர்களின் பிரச்சினைகளையே முன்னெடுக்கும். அரசினை மாற்றான தாய் மனப்பான்மையால தமிழ்ப்பேசும மாணவர்களின் கல்வியாலது சீரகெட்ட நிலைக்கு தளளபபட்டிருககும் இவவேளையில அனைத்து மாணவர்களும் எலலா வேறுபாடடையும மறநது "மாணவர்கள்" என்ற வகையில் ஐக்கியப்படடு எமது பிரசசினைகளை முன் எடுபபதறகு உதவவேணடுமெனக் கோரிக்கை விடுததார்.

பேரவையின் நிர்வாகிகள் விபரம வருமாறு; — செயலாளர்: எஸ். சதானந்தன் (சென் ஜெனறீஸ் கல்லூரி, இளவாலை); உபசெயலாளர்: கிரிஜாம்பாள் (இளவாலை கொன்வன்ற்); பொருளாளர்; எஸ். திருஅழகன் (வட்டு. இந்துக் கலலூரி); ஊதாடர்பாளர்; பரமலிங்கம வட்டு. யாழ்பபாணக் கல்லூரி) நிர்வாகசபை உறுபபினர்களாக அறுவர் தெரிவாகினர்.

## காவலூர் பாடசாலை அபிவிருத்தி சபை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்கத் தமிழ் ஆண்கள் பாடசாலையின், பாடசாலை அபிவிருத்திச்சபைக் கூட்டம் அண்மையில் பாடசாலை அதிபர் கி. ஸ்ரனிஸ்லஸ் தலைமையில் நிகழ்ந்தபோது மாணவர்களின் நலன்களைக் கவனிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கு பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர் பாடசாலை அதிபர் திரு கி. ஸ்ரனிஸ்லஸ் உபதலைவர்கள் முன்னாள் அதிபர் திரு. ஞானப்பிரகாசம், திருமதி ஜீவரெட்ணம், செயலாளர் திரு. நீ. ச. ஜேம்ஸ் பொருளாளர் எஸ். எம். ஜோசவ் (ஆசிரியர்) பதின்மூன்று பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாளை மத வழிபாடு

தந்தை செல்வநாயகம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை யாழ். முஸ்லிம்கள் சார்பில் விசேட மத வழிபாட்டு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளதாக இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஒட்டுசுட்டானில் பெரும் தேடுதல் வேட்டை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான், புளியங்குளம், குழாமுறிப்பு. கருவேலங்கண்டல், வெள்ளிமலை ஏற்றம், ஓட்டுத் தொழிற்சாலைப் பகுதி, கோடாலி முறிச்சான் பகுதியிலுள்ள காடுகள் ஆகியவற்றில் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளைத் தேடிப் பெரும் வேட்டையை காலை முதல் மாலைவரை நடத்தினர்.

முல்லைத்தீவு டிப்போவைச் சேர்ந்த ஆறு பஸ்களும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

## புதிய தலைவர்



திருநெல்வேலி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் புதிய தலைவராக திரு ஏ எம். இராஜேந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்படி சங்கத்தில் இவர் பணியாற்றிவந்துள்ளார். யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு சுங்கத்திணைக்களத்தில் காசாளராகப் பணியாற்றிய பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.




❋ பாஷையூர் சந்திரன் செலின் தம்பதிகளின் மகன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ பாஷையூர் ஆரோக்கிய நாதர் தவகம் தம்பதிகளின் மகன் சுதர்ஷன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ வேலணை மேற்கு வேலணை சண்முகலிங்கம் மகாலிங்கேஸ்வரி தம்பதிகளின் மகள் துஷ்யந்தி தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகின்றார்

❋ சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி கிட்னேஸ்வரன் சிவனேஸ்வரி தம்பதிகளின் மகள் டயனி தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ எழுதுமட்டுவாள், ஸ்ரனிஸலாஸ் லீலா தம்பதிகளின் மகன் அன்ரன் ஜெனிபேட் தனது ஆறுவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ யாழ்ப்பாணம் இரத்தினசிங்கம் புஷ்பராணி தம்பதிகளின் மகன் ரஞ்சிதகுமார் தனது பத்தாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ யாழ்ப்பாணம் நாதன்ஸ் மாணிக்கவாசகர் தங்கலட்சுமி தம்பதிகளின மகள் ஜனுஷ்யா தனது ஏழாவது பிறந்த நாளை இன்று கொணடாடுகிறார்.

## மாவட்ட நீதிபதி

(வேலணை)

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக சாவகச்சேரி நீதிமன்றத்தில கடமையாற்றிய திரு. பி. பாலவடிவேல அடுத்த மாதம தொடக்கம் நியமிக்கபபட்டுள்ளார். திரு. பாலவடிவேல முனபு இந்த நீதிமன்றத்தில கடமையாற்றி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

## தொலைக்காட்சி ரசிகர் கவலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சில்லாலை, பணடத்தரிப்பு, சிலலாலை, படலியடைபபு முதலான பகுதிகளில தொலைக்காட்சி இரசிகர்கள் கவலையுறும் வகையில் போட்டி அடிப்படையிலான செயலால காட்சித் தெளிவு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## வரி விளம்பரம்

**மாபெரும் ஏலவிற்பனை இன்றும் நாளையும்**

இடம்:- யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தைகட்டிடம் (நல்லூர்சந்தை) காலை 9மணி தொடக்கம் ஆயிரக்கணக்கான பொருட்கள். விபரங்களுக்கு ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

**வயல் விற்பனைக்கு**

கள்ளிப்பிட்டி, கண்டாவளை, மடுக்கரை வீதியில் 10 ஏக்கர் வயல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:— க. தியாகராசா, 'மதிவாசம்' புலோலி தெற்கு, புலோலி.




**குகன் ஸ்ருடியோ இடமாற்றம்**

பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ சிவன் கோவில் வடக்கு தெணி ரோட் 4 ஆம் வீட்டிலியங்குகிறது

ஈழமுரசு



**உதய சிந்தனை**

தம்மக்களின் மழலைப் பேச்சைக் கேட்டு இன்புறாதவர்களே "குழலிசை இனியது: யாழிசை இனியது" என்று புகழ்ந்து கூறுவார்கள்.

திருக்குறள் உரை (66)

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

30 3-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 17)

# சிந்திக்க வைக்கும் ஒரு சுவரொட்டி

தமிழர் பிரச்சினையும், இளைஞர் இயக்கங்களும் உருவான தன் பின்னர் தமிழ்ப் பகுதிகளை அலங்காரம் செய்வதில் முதலிடம் பெறுவது சுவரொட்டிகள்.

ஒரு காலத்தில் சினிமா நாயகன் நாயகிகளின் வர்ணப்படங்களையே கண்டு களித்து சுவைத்த தமிழ் மக்கள், அண்மைக் காலங்களில் போராட்ட வரலாறுகளையும், வீர அஞ்சலிகளையும், மரணதண்டனைகளையும் தமிழ்ப் பகுதிச் சுவர்களில் வாசித்து வருவது தமிழினப் போராட்டச் சரித்திரத்தின் திருப்புமுனையில் இடம்பெற்ற பெருமாற்றமாகும்.

மூலை, முடுக்கு, சந்தி, சந்தை எங்கும் தமிழர் பிரச்சினைகளையும், நிகழ்காலச் சம்பவங்களையும் விளக்கும் சுவரொட்டிகளே ஆக்கிரமிப்புச் செய்து வருகின்றன.

ஆனல், இவைகளிலிருந்து சற்று மாறுபட்டதான, தமிழ் மக்களின் எதிர்காலத்தினை ஊன்றிச் சிந்திக்க வைக்கக் கூடியதான சுவரொட்டியொன்று கடந்த சில வாரங்களாக குடாநாட்டின் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ளது.

வெறுமனே அரசியல் போராட்டத்தில் மட்டும் கரிசனை செலுத்தாது, தமிழ் மக்களின் எதிர்காலச் சந்ததியின் ''பலக் குறைவை'' எடுத்துக்காட்டும் வகையில் மிகவும் தீர்க்கதரிசனமாக இந்தச் சுவரொட்டி தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே எமது கருத்தாகும்.

தமிழர்கள் சனத்தொகையைக் குறைக்கச் செய்யும் கருத்தடைச் சத்திர சிகிச்சையைச் செய்யக் கூடாது என்று இந்தச் சுவரொட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கம் வழங்கும் ஐநூறு ரூபா பணத்துக்காக, தமிழினம் தற்கொலை செய்ய வேண்டுமா என்பது சம்பந்தப்பட்ட இயக்கம் முன்வைத்துள்ள கேள்வியாகும்.

பெரும்பான்மையின மக்கள் அடர்த்தியாக வாழும் மாவட்டங்களில் கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்பவர்களின் புள்ளி விபரங்களை தமிழ் மாவட்ட புள்ளி விபரங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்குப் பெரும் ரகசியம் புலனாகும்.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னர், மட்டக்களப்பு மாவட்டங்களில் வருடாவருடம் பல்லாயிரக் கணக்கானோர் கருத்தடைச் சிகிச்சை செய்துள்ளனர்.

முல்லைத்தீவில் தமிழ் இளைஞன் ஒருவன் திருமணமாகாதவன் – வெறுமனே ஐநூறு ரூபா பணத்துக்காக கருத்தடைச் சிகிச்சை செய்தான் என்ற செய்தி அதிர்ச்சியைத் தருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர், கருத்தடைச் சிகிச்சை செய்த பின்னர் அந்தப் பிள்ளைகள் இறந்து போனதால், தன்னல் மீண்டும் ஒரு குழந்தையைப் பெற முடியவில்லையே என்று தலையில் அடித்துக் கதறியழுவது வெறும் கற்பனைக் கதையல்ல.

அன்றாடம் நடைபெறும் தமிழ்ப்பகுதிச் சம்பவங்களால் எத்தனை இழப்புகளை தமிழினம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது?

ஊர், பேர் தெரியாது எரிந்து கருகும் சடலங்கள்;

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, உடலைப் படகில் ஏற்றிக் கடல் கடக்கும் ஜீவன்கள்;

உற்றார், பெற்றார், உறவினர்களை மறந்து, கண்காணாத வெளிநாடுகளுக்கு ஓட்டம் பிடிக்கும் தமிழ் இளசுகள்;

வீட்டுக்கு வீடு மரண ஒலி; பிரிவின் தாகம்; அழுகுரல்;

இவை போதாதென்று, இரண்டு லட்சம் சிங்களவரை இப்பகுதிகளில் குடியேற்றி, தமிழ் பகுதிகளிலேயே தமிழரை இரண்டாம் தரப் பிரஜைகளாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை.

இவைகளுக்கு மத்தியில் நாமே நமது சனத்தொகையைக் குறைக்க வேண்டுமா?

நாமே நமது இனத்தை மேலும் மேலும் சிறுபான்மை இனமாக்க வழி சமைத்துக் கொடுப்பதா?

பிறக்கப்போகும் பிஞ்சுகளைக்கொன்று குவிப்பதா?

இதனை வெறும் பிரசாரச் சுவரொட்டியாக எடுக்கக் கூடாது!

சிந்திக்க வைக்கும் 'சீரியஸான' ஒரு சுவரொட்டி இது.

---

அமெரிக்காவுடனான நிலை குறித்து ரஷ்யா விளக்கம்:

# விண்வெளி ஆயுத பாவனை பேச்சுகள் மட்டுமே நிகழும்!

(மாஸ்கோ)

விண்வெளியை எந்த ஆயுதங்களும் இல்லாமல் வைத்திருக்க வேண்டிய முறைகள் பற்றி மட்டுமே தான் அமெரிக்காவுடன் விவாதிக்கப் போவதாகவும் விண்வெளியில் ஆயுத வசதியைப் பெருக்குவதான அதிபர் றீகனின் போர்த் திட்டம் அல்லது விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட வேறெந்த திட்டம் பற்றியும் பேசப் போவதில்லை என்றும் சோவியத் யூனியன் தெளிவு படுத்தி விட்டது. ஜெனீவாவில் சோவியத் பிரதிநிதிகள் குழு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப் பட்டுள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்களில் விண்வெளியில் ஏவுகணை எதிர்ப்பு முறை பற்றியும் இடம் பெறும் என்று அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் கூறியதாக வந்த பத்திரிகைச் செய்திக்கு சோவியத் யூனியன் மறுப்புத் தெரிவித்தது.

போர் முக்கியத்துவமிக்க அணு ஆயுதங்களைக் குறைப்பது பற்றி நேற்று முன்தினம் ஜெனீவாவில் அமெரிக்க — சோவியத் பிரதிநிதிகள் விரிவாக ஆலோசனை செய்தனர். 15 மாத கால இடைவெளிக்குப் பின்னர் இப்பேச்சுக்கள் மீண்டும் தொடங்கியுள்ளன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடுத்தர ஏவுகணைகளை அமெரிக்கா ஈடுபடுத்துவது பற்றி சோவியத் யூனியன் ஆட்சேபித்ததால் 1983-ம் வருடம் டிசம்பரில் பேச்சு வார்த்தைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

## தென் கொலம்பியாவில் கோர ஜெட் விமான விபத்து

(லண்டன்)

தென் கொலம்பியாவில் நிகழ்ந்த கோர விமானவிபத்து ஒன்று குறித்து நேற்று அறிவிக்கப்பட்டது.

நாற்பது பயணிகளுடன் சென்ற இந்த ஜெட் விமானம் தரையிறங்கு முன் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பான மேல் விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## இரசத்தில் பல்லி விழுந்தது அனர்த்தம்

(திருநெல்வேலி)

தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாணவர் விடுதியொன்றில் இரவு உணவுண்ட மாணவர்கள் வாந்தி எடுத்து மயங்கி விழுந்ததையடுத்து மருத்துவமனைக்கு விரையப்பட்டனர்.

இவர்களில் 45 மாணவர்கள் சிகிச்சையின் பின் திரும்பினர். ஐவர் தொடர்ந்து சிகிச்சை பெறுகிறனர். இவர்கள் உண்ட இரசத்தில் விழுந்திருந்த பல்லியால் உண்டான விஷமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## கிழக்கு ஜெர்மனி கொலைச்சம்பவம்

## அமெரிக்க மேஜர் உளவில் ஈடுபட்டதால் நிகழ்ந்ததாம்

(மாஸ்கோ)

கிழக்கு ஜெர்மனியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோவியத் யூனியன் படைவீரர் ஒருவரால் அமெரிக்க இராணுவ மேஜர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

பிரஸ்தாப அமெரிக்க இராணுவ மேஜர் ஆர்தர் நிக்கல்ஸன் ஓர் உளவாளி என்று 'டாஸ்' கூறியுள்ளது. கொலைச் சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ள இந்த ஸ்தாபனம் பிரஸ்தாப மேஜர் கிழக்கு ஜெர்மனியில் சோவியத் யூனியன நிறுவனப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்து உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

## பிரிட்டனுடன் ஆர்ஜென்டீனா உறவு மாமூலாக்க நிபந்தனை

(ஆர்ஜென்டீனா)

போகலண்ட பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டால் பிரிட்டனுடனான உறவுகளை மாமூல்படுத்திக் கொள்வதற்குத் தான் தயாரென்று ஆர்ஜென்டீனா கூறியுள்ளது.

போகலண்ட தீவுகளின் இயற்கை வளங்களை பாதிக்கும் ஒருதரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் பிரிட்டன் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வு ஒன்றிற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது என்று ஐ. நா. தலைமைச் செயலருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் ஆர்ஜென்டீனா அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

## ரூ. 230 கோடி செலவில் காகித ஆலை

(திருச்சி)

திருச்சி மாவட்டம் சருருக்கு அருகேயுள்ள புகழூரில் இருநூற்று முப்பது கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை அடுத்தமாதம் வர்த்தக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

கரும்புச்சக்கையை மூலப் பொருளாகக் கொண்ட இத் தொழிற்சாலை எழுநூற்று எண்பதத்து ஐந்து ஏககரில நிறுவப்பட்டுள்ளது.

## இருவருடங்கள் சீர்குலைந்திருந்த பஞ்சாப் பொருளாதாரம் புத்துயிர் பெற நடவடிக்கை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தின் பொருளாதாரத்துறை வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொருட்டு உயர் நிலைக் குழு ஒன்றினைப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நியமித்துள்ளார்.

இங்கு இருவருடங்களாகச் சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தை உத்வேகத்துடன்வலுப் படுத்த இக்குழு செயற்படும்.

இது இவ்வாறு இருக்க, இங்கு சட்டம், ஒழுங்கு இப்போது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் சண்டிகாரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் துரதிர்ஷ்டவசமானது இது இங்குள்ள ஒட்டுமொத்தமான நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்றும் பஞ்சாப் ஆளுநர் திரு. அர்ஜுனசிங் புதுடில்லியில நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## துருப்புகள் வாபஸ் நிலை

(பெய்றூட்)

தென் லெபனனில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் முழுமையாக வாபஸ்பெறப் பட்டுவிடும் என்று அதிகார வட்டாரங்களில் நேற்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

## ஆட்சி மன்றத்தில் சிங்கை ஜனதிபதி கடிதம் வாசிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் ஜனதிபதி திரு. தேவன் நாயர் தனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே ராஜினாமாச் செய்தார் என்று பிரதம மந்திரி திரு. லீகுவான்யு பாராளுமன்றத்தில் ஜனதிபதியின் கடிதத்தை வாசித்துக் காட்டுகையில் தெரிவித்தார்.

1981ம் வருடம் சிங்கப்பூரின் மூன்ருவது ஜனதிபதியாகப் பதவியேற்ற தேவன் நாயர் சுகவீனமுற்றுள்ளார் என்பது தெரிந்ததே.

## பாரத-சீன உறவு மேம்பாடு: பீக்கிங்கில் எடுத்துரைப்பு

(பீக்கிங்)

சீனவிற்கும், பாரதத்திற்குமிடையே இப்போது எல்லைப் பிரச்சினை மட்டுமே உள்ளது என்று சீனவிற்கான புதிய பாரதத் தூதுவர் திரு. கே. பி. எஸ். மேனன் தெரிவித்துள்ளார்.

தனது நியமனக் கடிதத்தை சீன ஜனதிபதியிடம் கையளித்து திரு. மேனன் உரையாடினர்.

பாரத — சீன உறவுகள் மேம்பட வேண்டுமென்ற பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியினதும் ஏனைய பாரதத் தலைவர்களினதும் விருப்பத்தைத் திரு. மேனன் சீன ஜனதிபதியிடம் தெரிவித்தார்.

ஈழமுரசு

## திருமலை சம்பவத்தை அடுத்து கூட்டு தேடுதல் வேட்டை

(திருமலை)

நேற்று முன்தினம் இரவு சாம்பல்தீவில் ஆதவன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் வானைக் கடத்திய தீவிரவாத இளைஞர்கள் இப்பகுதியிலுள்ள வெளிநாட்டவர் ஒருவருக்குச் சொந்தமான பங்களாவில் பலவந்தமாகப் புகுந்து படகுகள் நிறுத்தப்பட்டிருந்த கொட்டகையிலிருந்து இரண்டு அதி சக்தி வாய்ந்த அவுட்டோர் மோட்டார்களைக் கடத்திச் சென்றுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இரவு பத்து மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றவுடன் இராணுவமும் கடற்படையும் சாம்பல்தீவு பகுதிகளைச் சுற்றிவளைத்துத் தேடியும் எவ்வித தடயமும் கிடைக்கவில்லை. மேற்படி வெளிநாட்டவரின் மனைவியான இலங்கைப் பெண் உப்புவெளி பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுகின்றது.

### கொழும்பிலிருந்து வடமராட்சி வரை

# அமிர் பூரண நலம்வேண்டி ஆலயம் தோறும் விசேஷ பூசை வழிபாடுகள்

கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பூரண நலம் பெற்று பலலாண்டு வாழ வேண்டி, தமிழர் வாழுமிடமெங்கும் விசேஷ பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வருவதாக பலவேறு இடங்களிலிருந்தும் எமது நிருபர்கள் அறிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டி, கொழும்பு முகத்துவாரம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள சைவ ஆலயங்களில் நேற்று விசேஷ ஆராதனைகள் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து விசேஷ பிரார்த்தனை நடத்தினர்.

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்றுக்காலை சிறப்புப் பூசை நடைபெற்றது.

நாளை 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், கன்னாதிட்டி ஸ்ரீ காளிதேவி ஆலயம், கடைத்தெரு சித்தி விநாயகர் ஆலயம், யாழ் கே. கே. எஸ் வீதி கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஆகியவற்றில் தொடர்ச்சியாக ஆப்பூசைகள் நடைபெறும். அனைத்து லங்கை அண்ணா தி மு க. பொதுச் செயலாளர் பொன். மதிமுகராசா, யாழ்நகர் பஞ்சாயத்து அமைப்பாளர் திரு கோபால பிள்ளை ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்,

சகல வர்த்தகர்களையும், சிப்பந்திகளையும் இவ்வழிபாடுகளில் கலந்து கொள்ளுமாறு யாழ் வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு சி நமசிவாயம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில நாளை ஞாயிறு காலை 10 30 மணிக்கு விசேஷ பூஜை நடைபெறவுள்ளது. அதற்குமுன்னர் காலை 9 மணிக்கு நல்லூ நாவலர் மண்டபத்தில் பல்வேறு இந்து மன்றங்களும் இணைந்து நடத்தும் பிரார்த்தனை ஆடம் பெறும்.

நாளை காலை செல்வச்சந்நிதியிலும் விசேஷ பூஜை நடத்தப்படும்.

நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம பகுதியிலுள்ள பல்வேறு ஆலயங்களிலும விசேஷ வழிபாடுகளை நாளை நடத்துவதற்கான ஒழுங்குகளை முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள் ஆ. துரைராஜசிங்கம், என். ரி. செல்லத்துரை, சு. சண்முகராஜா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

## வானொலியில் சிறப்பு நிகழ்ச்சி

கடந்த வாரம் காலமான நாடகக் கலைஞர் கே.எம் வாசகரின் நினைவாக ''வாடாத ஒரு மலர் வளையம்'' என்ற சிறப்பு நிகழ்ச்சி இன்று மாலை 6-30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையில் ஒலிபரப்பாகும்.

## வயலின் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

வித்துவான் வண்ணை திரு. ஜி சண்முகானந்தனின் மாணவரான செல்வன் நடராஜா பாலமுரளியின் வயலின் அரங்கேற்றம் ஏப்ரல் முதலாம் திகதி மாலை கொழும்பு இந்துக் கல்லூரிமண்டபத்தல் கலலூரி அதிபர் திரு ரி சங்கரலிஙகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## விடுதலையான இளைஞரிடம் தமது பிள்ளைகள் சுகம் விசாரித்து அழுதனர் அன்னையர்மார்

பூஸாவிலிருந்து விடுதலை பெறற 40 இளைஞர்களும் நேற்று யாழ்ப்பாணம் வநது சேர்ந்தனர். இவர்களின பெற்றோர் கச்சேரிக்கு வந்து நின்று, கண்ணீர் மல்க தமது பிள்ளைகளை கட்டித்தழுவி வரவேறறதைக் காணக் கூடியதாகவிருந்தது.

விடுதலை பெறாத இளைஞர்களின் தாய்மாரும், உறவினர்களும் விடுதலை பெற்று வந்த இளைஞர்களிடம் தமது பிளளைகளின நிலைபற்றி ஆவலுடன் கேட்டறிந்து அழுதலையும் இங்கு காண முடிந்தது

நேற்று விடுதலை பெற்று வந்த 40 இளைஞர் விபரம் வருமாறு:-

தளையசிங்கம் அபூர்வசிங்கம், இராசு சந்திரசேகரம, அடைக்கலன் இலங்கைராசா, அருந்தவராசா ஜீவன், ஜெகநிவாஸ் ஜோசெப் பீற்றர், வல்லிபுரம் கேதீஸ்வரன், இரத்தினம் கனகேஸ்வரம், நடராசா நவபாலன், முருகன் ரவிச்சந்திரன், கதிரவேல் ராஜேந்திரன், தங்கராசா சிவலிங்கம, சுப்பிரமணியம் சச்சிதானந்தன், ஆறுமுகன் ஸ்ரீபாஸ்கரன் மோகன், க. தவராசா, தளையசிங்கம் துரைசாமி, கந்தையா விஜயகுமார் முருகன் யோகச்சந்திரன் சிறீவர்த்தனம் யோகேஸ்வரன், இராசையா பாலசுப்பிரமணியம், ஐயாத்துரை குணரட்ணம், தில்லையம்பலம் மனோகரன், கதிரவேலு நடராஜா, இரத்தினசிங்கம் பத்மநாதன், நடேசன் பத்மசிறி, பொன்னுத்துரை சுரேந்திரன, பொன்னையா தவராசா, குருசாமி ஜெயக்குமார், மாணிக்கம் நாகேந்திரன், வல்லிபுரம் ரட்ணம், பொன்னுத்துரை கேதீஸ்வரன், சின்னக்குட்டி சந்திரன், கதிர்காமச்சந்திரன், கணேசன் பரதகுமார், சிற்றம்பலம் ராகவன், செபஸ்தியாம்பிள்ளை சத்தியநாதன், சங்கரன் சிவயோகநாதன், பொன்னம்பலம் சிவமூர்த்தி, கணேசன் தங்கராசா, குமார் வீரசிங்கம், வேலுச்சாமி செல்வமுருகன்.

### பஸ் நிலைய ஒயில் கொள்ளை

யாழ் பஸ் நிலையத்திலிருந்து ஒரு பரல் என்ஜின் ஒயில் உட்பட மற்றும் பல பொருட்கள் நேற்று முன் தினம் இரவு கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன.

பஸ் நிலைய அறைப் பூட்டை உடைத்துக் கொண்டு சென்றவர்களே இவற்றை அபகரித்துச் சென்றுள்ளார்கள். இச்சம்பவததின்போது பஸ் நிலைய பெற்றோல் பம்ப் உட்பட வேறும சில பொருட்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஒருவர் கைது...

—1ம் பக்கத் தொடர்

சைக்கிளில் வந்த இருவர் சீருடையினர் வருவதைக் கண்டு பயந்து ஓடியபோது கே யில பின் வீதியில் படையினரால் துரத்தி ஒருவர் பிடிக்கப்பட்டார் மற்றவர் தப்பிச்சென்று விட்டார் கைதானவரை சீருடையினர் விசாரணைக்காக தம்முடன் அழைத்துச் சென்றனர்.

### ஏப்ரல் மாத...

—1 ஆம் பக்கத் தொடர்

வடிக்கை எடுக்கப்பட்டுளளது.

இவர்களுக்கு மார்ச் மாதம், ஏப்ரல் மாதம ஆகிய இரு மாதங்களினதும் பென்ஷன் பணம் ஒரே காசோலையாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பினவரும் அட்டவணையின் படி பென்ஷன் காசோலை வழங்க படும்,

ஏப்ரல் 1 ஆம் திகதி திங்கள்:- குடிசார் (சிவில) ஒய்வூதியப் பட்டியலில் முதல் 120 பக்கங்களில் வருபவர்கள்.

2 ம் திகதி செவ்வாய் :- ஏனைய பக்கங்களில இடம் பெறும் சிவில் ஒய்வூதயம் பெறுபவர்களுக்கு.

3ம் திகதி புதன் ;- விதவைகள், அநாதைகள், ஆசிரியர்கள் ஏனைய ஒய்வூதியம் பெறுவோர்

8ம் திகதி திங்கள்;- மலேசிய சிங்கப்பூர் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு.

### தபால் நிலைய...

ஷன வழங்கப்படுமென்று யாழ் பிரதம தபாற் அதிபர் அறிவித்துள்ளது.

ஏபரல் 2ம் திகதி அளவெட்டி, வட்டுக்கோட்டை, புங்குடுதீவு, வயாவிளான், வேலணை.

3ம திகதி கோப்பாய், உரும்பராய், அனலைதீவு, மானிப்பாய், சாவகச்சேரி,

8ம் திகதி நயினாதீவு, காரைநகர், சுழிபுரம, கொக்குவில், காங்கேசன்துறை.

9ம் திகதி பருத்தித்துறை, தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை.

10ம் திகதி வல்வெட்டித்துறை, சுன்னாகம், பண்டத்தரிப்பு

11ம திகதி கரவெட்டி, யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை

### நல்லை ஆதீனத்தில்:.

முதல் தலைவர் திரு அ அமிர்தலிங்கம நலம் வேண்டி விசேஷ பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. திருநெல்வேலி இந்து இளைஞர் பேரவையின் கூட்டுப பிரார்த்தனையும் இடம்பெறும்.

### தந்தை செல்வா..

—1 ஆம் பக்கத் தொடர்

8 மணிக்கு ''செல்வா நினைவு ஸ்தூபி'' முன்னால் செல்வா அறங்காவல் குழுத் தலைவர் பேராசிரியர் கே. நேசையா தலைமையில் நடைபெறும். இத்தினத்தில் சிவநெறிக் காவலர் மில்க்வைற் கனகராசாவின் உதவியால் பல இடங்களிலும் மரம் நாட்டு விழா நடைபெறவுள்ளது.

### இலங்கை..

—1 ஆம் பக்கத் தொடர்

அரசகரும மொழியாக்கப்பட்டது மட்டுமன்றி, தமிழர் சகல துறைகளிலுமே திட்டமிட்டுப் புறக்கணிககபபட்டு வருகின்றனர்'' என்றும் இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''பிரிட்டன் வழங்கும் நிதி உதவி சிங்களப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவே பயன் படுத்தபபடுகின்றது. அது மட்டுமன்றி, தமிழ் பகுதிகளில் படுகொலைக்கும உபயோகிக்கப்படுகின்றது'' என்றும சுட்டிக்காட்டபபட்டுள்ள இம் மகஜரில், ''நீங்கள் இலங்கைக்கு வருவீர்களாயின் தமிழர் பிரச்சனை பற்றி எதுவும் பேசாது மௌனம சாதப்பதேநல்லது'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து இதுவரை நடைபெற்று வரும் சகல சம்பவங்களையும் விளக்கி ஐம்பது பக்கத்தில் தயாரிக்கப்பட்டுள்ள மகஜரில் டாக்டர்கள், சட்டத்தரணிகள், தொண்டர் ஸ்தாபன பிரமுகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், தொழிற் சங்கப் பிரமுகர்கள், குடும்பப் பெண்கள், மாணவர்கள், பிரஜைகள் குழு பிரதிநிதிகள் உடபட சுமார் 5000க்கும் அதிகமானோர் ஒப்பமிட்டுள்ளனர்.

### தாதியாருக்கு,.

—1 ஆம் பககத் தொடர்

புதிய தாதமார்கள் நியமிககப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து எச்சரிக்கை விடுத்துளளார். சுகாதார தினைக்கள ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவா தெரிவித்துள்ளார்.

### தமிழர் விவகாரம்...

—1 ஆம் பக்கத் தொடர்

ளவு விரைவாக அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்க்கமானமுடிவு ஏற்படுவதில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இப்பிரச்சினைக்கு காலக்கெடுவுடனான திட்டம் எதுவும் விதிக்க முடியாது என்றும் அவர் சொன்னார். இப் பிரச்சினையில் பாரத நிலையில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் தெரிவித்த அமைச்சர்ஆலம்கான் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்க இரு நாடுகளும் இணங்கியுள்ளதாகவும் கூறினார்

### இராணுவ நட..

—1ம் பக்கத் தொடர்

க்கப்படுவதனால் பயங்கரவாதம் தானாக மறைந்து விடாது இது அனுபவ ரீதியில தெரிந்துகொண்ட உண்மையாகும். வன்செயல்கள் குறைந்து விட்டால் மாத்திரமே சகல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும'' என்று ஜனாதிபதி சட்டத்தரணியாக தாம நியமிக்கப்பட்டதைப் பாராட்டும் பொருட்டு கொழும்பில் நடத்தப்பட்ட லயன்ஸ் கழகக் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் அத்துலத் முதலி குறிப்பிட்டார்

''தீவிரவாதிகள் தென்பகுதியில் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டுவருகிறார்கள் என்பதை நாட்டுமக்கள் தற்போது நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள், நாட்டில் வன் செயல்களை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் விவகாரங்களில் இந்தியாவைத் தலையிடச் செய்ய முடியும் என்று தீவிரவாதிகள் நம்புகிறார்கள் என்றாலும் அவர்களின் இந்த வன்செயல் போக்கு அவாகள் எதிர்பார்த்த அளவு உதவவில்லை'' என்றும் அமைச்சர் சொன்னார்

### கூட்டறிக்கை..

—1 ஆம் பக்கத் தொடர்

இரு நாடுகளும் கூட்டறிக்கை எதனையும் வெளியிடவில்லை என்றும், இலங்கைப் படையினர் ஒழுக்கம் பெற்றவர்களாக மாற வேண்டும் என்றும் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் கூறிய அமைச்சர் குர்ஷித் ஆலம்கான், இந்தியா வந்துள்ள அகதிகள் திரும்பி இலங்கை செல்லக் கூடியதான சுமுகநிலையை முதலில் ஏற்படுதத வேண்டியது இலங்கை அரசின் கடமை என்றும் சொன்னார்

ஹற்றன் நாஷனல் வங்கியின் கொள்ளையால் பாதிக்கப்பட்டோரின் தொடர் கூட்டம்

மேற்படி கூட்டம் இன்று 30/3/85 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வை எம்.சி ஏ. (Jaffna YMCA) கட்டடத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

R. J. குணரத்தினம்
தலைவர்

50. பலாலி வீதி
கோண்டாவில்

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 30-3 1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி; 23336